# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/12 - 2023 සැප්තැම්බර් මස 04 වැනි සඳුදා - 2023.09.04

*2348/12 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மஹியங்கனை எசல உற்சவம் - 2023**

*362 ஆம் அத்தியாயமான யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய, 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1967, யூன் மாதம் 09 ஆந் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானியிலும்,* வெளியிடப்பட்ட மஹியங்கனை யாத்திரைகள் தொடர்பான சட்டங்களும், *1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க* அதிகார கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கு அமைவாகவும் மஹியங்கனை பிரதேச செயலாளர் வீரசிங்க முதியன்சேலாகே சஞ்ஜய பிரசாத் வீரசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய 2023 மஹியங்கனை எசல உற்சவ முகாம்கள் தொடர்பாக கீழுள்ள கட்டளைகளை பிறப்பிக்கின்றேன்.

01. 2023, செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி மஹியங்கனை எசல உற்சவம் ஆரம்பிக்கப்பட்டு, 2023, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி தீர்த்த நீர் வெட்டுடன் நிறைவுறும் என்பதை அறியத்தருகின்றேன்.

02. மஹியங்கனை – பிபிலை பிரதான வீதியின் 37 வது கி.மீ. கல்லிலிருந்து மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள 2/39 அடையாளக்கல் (போக்கு) வரையிலும், வில்லுவ வெவ வீதியின் ஆரம்ப பகுதியும், மஹியங்கனை வைத்தியசாலைக்கு முன்னால் கடிகார கோபுரத்திற்கு அருகாமையில் சேரும் கங்கவட வீதி, அங்மெடில்ல மற்றும் தேவாலய வீதிகளின் எல்லைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள இடம் யாத்திரிகர்கள் தங்குவதற்கு முகாமிடும் பிரதேசமாக பெயரிடுகின்றேன்.

03. விகாரை பூமி, அரசமர பூமி, தேவாலய பூமி போன்ற இடங்கள் மற்றும் அண்மித்த இடங்களில் உணவு சமைத்தல் மற்றும் வியாபார நடவடிக்கைகளை தடை செய்கின்றேன்.


1A - G 40264 — 26 (2023/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

04. மத்திய வீதியில் தூபியை நோக்கியுள்ள நிலப்பரப்பு மற்றும் மஹர தோரணத்திற்கு இடது புறமாக அமைந்துள்ள நிலப்பரப்பில் பிரதேச செயலாளர்/முகாம்களுக்கான பொறுப்பதிகாரியினால் வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்திற்கு அமைய பூக்கள், ஊதுவர்த்தி, மெழுகுவர்த்தி, சூடம், நேர்த்திக்கடன் தீர்ப்பதற்கான உருவச்சிலைகள் மற்றும் பூசைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கின்றேன்.

05. மேற்படி பொருட்களை விற்பனை செய்வதற்காக இராஜ மஹா விகாரை மற்றும் சமன் தேவாலயத்தினால் நிரந்தரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 60 கடைக் கட்டிடங்களை தவிர எஞ்சிய பகுதியில் தூபியை நோக்கியுள்ள நிலப்பரப்பிற்கு அப்பாலும் அனுமதியளிக்கின்றேன்.

06. மேலே இரண்டாவது பிரிவின் பிரகாரம் முகாம் பிரதேசத்தில் பிரதேச செயலாளரிடம்/ முகாமிற்கு பொறுப்பான அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கூடாரங்கள் மற்றும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள 60 நிரந்தரக் கட்டிடங்களில் யாத்திரிகர்களுக்கு உணவு, பானம், பகிர்வதற்கும் அல்லது விற்பனை செய்வதற்கும் வேறு பொருட்களை விற்பனை செய்வதற்கும் அனுமதியளிக்கின்றேன்.

07. பஸ்நாயக்க நிலமே அவர்கள் மற்றும் விகாரை தேரரினால் பகிரங்க அறிவித்தலில் பெரஹெர செல்லும் பாதையாக அறிவிக்கப்பட்டுள்ள துட்டகைமுனு வீதி, மத்திய வீதி, அம்மொடில்லை வீதி, பதுளை மஹியங்கனை பிரதான வீதி, அரசமர மாவத்தை, சங்காவாசய முன்னால் உள்ள வீதி ஆகிய பாதைகளின் இருமருங்கிலும் நீர் வழிந்தோடக்கூடிய வாய்க்காலிலிருந்து 10 அடிக்கு அப்பால் உள்ள பிரதேசத்தை வியாபார நடவடிக்கைகளுக்கு ஒதுக்குகின்றேன்.

08. வைத்தியசாலைக்கு முன் மணிக்கூட்டுக் கோபுரம் தொடக்கம் பதுளை பிரதான வீதியில் மஹர தோரணம் வரை சாலையின் இருபுறம் மற்றும் நிரந்தர வியாபார நிலையங்கள் முன் வியாபாரம் செய்வதை தடை செய்கின்றேன்.

09. மேலே 4, 5, 6 ஆகிய பிரிவுகளில் விடுக்கப்பட்டுள்ளதை தவிர்த்து, முகாம் பூமியினுள்ளே வேறெந்த இடத்திலும் தற்காலிக வியாபார நிலையங்களை நிர்மாணித்தல், நடமாடும் வியாபார நிலையங்கள் மூலம் வியாபாரம் செய்தல் மற்றும் ஆற்றங்கரை பாதை இருமருங்கிலும் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்கள் தவிர்த்து தற்காலிகமாக வேறு வியாபார நிலையங்கள் நிர்மாணிப்பதை முற்றிலும் தடை செய்கின்றேன்.

10. பிரதான வீதியில் தனிப்பட்ட வாகனங்களை நிறுத்துவதை தடை செய்கின்றேன்.

11. மிதி வண்டி மற்றும் மாட்டு வண்டி உள்ளிட்ட சகல மோட்டார் வாகனங்களும் பிரதேச செயலாளர்/முகாம் பொறுப்பாதிகாரி அல்லது அவர்களினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேறு உத்தியோகத்தர்களின் அனுமதிப்பத்திரம் இல்லாமல் முகாம் பூமிக்குள் செல்வதை தடை செய்கின்றேன்.

12. மஹியங்கனை-பிபிலை வீதியை நோக்கியவாறு நிர்மாணிக்கப்பட்டுள்ள நுழைவாயிலுக்கு அண்மையில் புனித பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி, வில்லுவ வெவ வீதி, மஹர தோரணை அருகில் புனித பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி, வைத்தியசாலைக்கு முன் மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமையில் உள்ள வீதி மற்றும் மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் உள்ள 2/39 அடையாளக்கல் (போக்கு) இற்கு அண்மையிலுள்ள பாதைகளினூடாக முகாம் பூமிக்குள் அனுமதிப்பத்திரமின்றி எந்தவொரு வாகனங்களையும் உட்செலுத்துவதை தடை செய்கின்றேன்.

13. முகாம் பூமியினுள்ளே வியாபாரம் செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் குத்தகைக்கு வழங்கும் முறை தொடர்பாக அறிவித்தல் மூலம் என்னால் பகிரங்கப்படுத்தப்படும்.

14. குத்தகைக்கு பெற்றுக்கொண்ட பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் தற்காலிக கட்டிடங்கள் மஹியங்கனை சுகாதார வைத்திய அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு ஏற்ப அமைய வேண்டும்.

15. என்னால் அறிவிக்கப்படும் பட்சத்தில் எல்லா விற்பனை நிலையங்களுக்கு அருகாமையிலும் 01 அல்லது 02 தற்காலிக மலசலகூடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

16. நிலங்களை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எசல உற்சவத்தின் பின் தமது தற்காலிக கட்டிடங்களை அப்புறப்படுத்திய பின்னர் முகாம் பூமிக்குள் உள்ள பொலித்தீன் உள்ளிட்ட அனைத்துக் குப்பைகளையும் சேகரித்து பொது சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைப்படி அகற்றுதல் வேண்டும்.

17. என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதி பத்திரம் இன்றி முகாம் பூமிக்குள் எந்தவொரு நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடத்தையும் அமைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.

18. பிரதேச செயலாளர்/முகாம் பொறுப்பதிகாரி ஆகியோரின் அனுமதியின்றி பாதையாக பயன்படுத்தும் அல்லது ஒதுக்கப்பட்ட அல்லது ஏதேனும் காணி அல்லது முகாம் பூமிக்குள் ஆற்றுப்படுக்கை போன்று உள்ள இடங்களில் கூடாரங்கள் அல்லது ஏதேனும் முறையில் கட்டிடங்கள் நிர்மாணிப்பு அல்லது விஸ்தீரணம் செய்யக்கூடாது.

19. பெரஹெர பார்வையிடுவதற்கு பணம் அறவிட்டு ஆசனங்களை வழங்குவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

20. பதுளை – மஹியங்கனை பிரதான வீதியில் வலய கல்வி பணிமனையிருந்து புதிய கொவிட் இரசாயனகூட பிரிவு வரையிலான பகுதியில் தற்காலிக வியாபார நிலையங்கள் நிர்மாணிப்பதனை தடை செய்கின்றேன்.

21. வாகன தரிப்பிடங்கள்

I. புனித பூமிக்கு பெயரிடப்பட்டுள்ள வாகன தரிப்பிடம் (வைத்தியசாலைக்கு முன்னே உள்ள பகுதி)
II. சிரிசங்கபோ முன் பள்ளி மற்றும் மஹர தோரணைக்கு இடது பக்க பகுதியிலிருந்து அரசமர வீதி வரையிலான பகுதி
III. வில்லுவ வெவ பாதை மற்றும் மஹியங்கனை – பிபிலை பாதைக்கு மத்தியில் முக்கோண வடிவ பகுதி பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிகள் தரிப்பதற்காக

**15 ஆவது ஒழுங்குவிதி**

(அ) பிரதேசத்தில் பட்டாசு கொழுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற அலுவலர்களின் அனுமதி இன்றி யாரேனும் ஒருவரால் முகாம் பிரதேசத்தில் டிக்கட், கொடி விற்பனை செய்தல் மற்றும் வேறு ஏதேனும் முறைகளில் எந்தவிதமான விடயத்திற்காகவும் அல்லது நன்கொடை நிதி சேகரித்தல் கூடாது.

**டப்ளிவ். எம். சஞ்ஜய பிரசாத் வீரசிங்க,**
பிரதேச செயலாளர், மஹியங்கனை

**மஹியங்கனை எசல உற்சவம் - 2022**

362 ஆம் அத்தியாயமான யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1967, யூன் 09 ஆந் திகதிய 14752 ஆம் இலக்க வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட மஹியங்கனை யாத்திரைகள் தொடர்பான சட்டங்களும், 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகார கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கு அமைவாகவும் மஹியங்கனை பிரதேச செயலாளர்/முகாம் பொறுப்பதிகாரி வீரசிங்க முதியன்சேலாகே சஞ்ஜய பிரசாத் வீரசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய கீழுள்ள இடங்களை யாத்திரிகர்களுக்கு உணவு, நீர் பகிர்ந்தளிக்க அல்லது விற்பனை செய்ய ஒதுக்குகின்றேன்.

(அ) மஹியங்கனை – பிபிலை வீதியின் 37 வது கி.மீ. கல்லிலிருந்து தேசிய பாடசாலைக்கு முன்னால் அமைந்துள்ள 2/39 அடையாளக்கல் (போக்கு) வரை உள்ள நிரந்தர கட்டிடங்கள்,

(ஆ) முகாமிடும் பிரதேசங்களில் யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள மைதானத்தில் என்னிடம் பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்திற்கு அமைய அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கட்டிடங்கள்,

மேற்குறிப்பிட்ட இடங்கள் அன்றி முகாம் பிரதேசத்திற்குள் ஏனைய எந்தவொரு இடத்திலோ அல்லது காணியிலோ கட்டிடங்கள் அமைப்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.

**டப்ளிவ். எம். சஞ்ஜய பிரசாத் வீரசிங்க,**
பிரதேச செயலாளர், மஹியங்கனை.

பிரதேச செயலகம், மஹியங்கனை,
2022 , ஓகத்து 15.

EOG 09 - 0036

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.